**சிறப்பு சார்பு நீதிமன்றம் , திண்டுக்கல்**
**M.C.O.P.No. 72/2024**

**தேதி:-24.02.2026 ம.சா.2**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | : **பஞ்சவர்ணம்** | **தொழில்** | : |
| **தந்தை/ கணவர் பெயர்** | : | **கிராமம்** | : |
| **வயது** | : | **தாலுகா/மாவட்டம்** | : |

சாட்சி முன்னிலை. சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு முதல் விசாரணை மேற்கொள்ளப்படுகிறது.

**முதல் விசாரணை**

நான் மனுதாரர் தரப்பு அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க முன்னிலையாகியுள்ளேன். நான் மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் மருத்துவ பதிவேடு நுட்பராக பணிபுரிகிறேன். எனக்கு அளிக்கப்பட்ட அங்கீகார கடிதம் **சா.சா.ஆ.1.** அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ள மனுதாரர் முருகன் எங்களது மருத்துவமனையில் 03.05.2015 முதல் 16.05.2015 வரை சிகிச்சை எடுத்ததற்கான ஆவணங்கள் கோரப்பட்டது. அது தமிழ்நாடு அரசு பிறப்பித்த அரசாணையின்படி அந்த மருத்துவ பதிவேடுகள் அழிக்கப்பட்டது அதற்குரிய அரசாணை உண்மை நகல் **சா.சா.ஆ.2.** மேற்கண்ட நபர் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டதற்கான விபத்து பதிவேடு உண்மை நகல் தாக்கல் செய்கிறேன். அது **சா.சா.ஆ.3**.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் தாக்கல் செய்துள்ள விபத்து பதிவேடு உள்ள பதிவுகள் நான் பதிவு செய்யவில்லை. அதில் Temporal Bone முறிவு உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அவருக்கு காரை எலும்பில் முறிவு உள்ளதாக குறிப்பிடபடவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

**மறு விசாரணை - இல்லை.**

S SOMASUNDARAM

Digitally signed by S SOMASUNDARAM
Date: 2026.02.25 17:46:34 +0530